Deposition of Witness

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Date : 21.07.2025

CMP**. No. 2127/2024**

Deposition of Pw1

| | | | |
|---|---|---|---|
| Name | Sivakami | calling | |
| Husband’s Name | Kulanthaisamy | caste | |
| Age | | Religion | |
| Village | **Mullampatti** | Taluk | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **21.07.2025.**

**முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் முள்ளம்பட்டி ஊராட்சித் தலைவியாக இருந்து வந்தேன். 1ம் எதிரி மணிமேகலை என்னை எதிர்த்து போட்டியிட்டு ஊராட்சித் தலைவர் பதவியில் தோற்ற நபர் ஆவார். 2ம் எதிரி கிருஷ்ணமூர்த்தி எந்த ஒரு பொதுப்பணி நடந்தாலும் அங்கு வந்து எனக்கு கமிஷன் தொகை வேண்டும் என்று பிரச்சனை செய்வார். 3 மற்றும் 4 எதிரிகள் எங்கள் பகுதியில் வசிப்பவர்கள் ஆவார்கள். 5 முதல் 8 வரை உள்ள எதிரிகள் எங்கள் பகுதிக்கு சம்பந்தம் இல்லாத நபர்கள் ஆவார்கள்.

2. நான் ஊராட்சித் தலைவராக இருந்த போது 2020 ம் ஆண்டு தீர்மானம் வைக்கப்பட்டு 21.12.2020 ம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு முறையாக டென்டர் கொடுக்கப்பட்டு வடிகால் வாரியம் 2021 ம் ஆண்டு கட்ட ஆரம்பித்தோம். அந்த வடிகால் வாரியத்துக்கு மொத்த செலவு தொகையாக ரூ. 2,33,000 த்தை செலவு செய்து அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். எதிரிகள் 8 பேரும் பொதுமக்கள் மத்தியில் என்னுடைய பெயரை கெடுக்க வேண்டும் அவமானப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வடிகால் வாரியத்தை காணவில்லை என பொய்யாக 07.10.2023 ம் தேதி சன் டிவியிலும், கழிவு நீர் வடிகாலை காணவில்லை என தவறான செய்தியை ஒளிபரப்ப செய்தார்கள்.

3. 1 முதல் 8 வரை உள்ள எதிரிகள் அவதூறாகவும், பொய்யாகவும் துண்டு பிரசுரங்கள் மூலமும், வாட்ஸ் ஆப் மூலமும், பேனர்கள் வைத்தும் அவமானப்படுத்தி வடிகால் வாரியத்தை கண்டுபிடித்து தருபவர்களுக்கு ரூ. 1,00,000 தருவதாகவும் பொய்யாக அவதூறு பரப்பி வந்தார்கள். அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். பின்னிட்டு 09.10.2023 ம் தேதி நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் புகார் மனு அனுப்பினேன்.

4. காஞ்சிக்கோவில் காவல் நிலையத்துக்கும் புகார் அளித்தேன். காஞ்சிக்கோவில் காவல் நிலையத்தில் புகார் மனு ரசீது அளித்தார்கள். அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். என்னை விசாரிக்காமல் கோர்ட்டில் பார்த்துக் கொள்ளும் படி தெரிவித்தார்கள். எதிரிகளுக்கு அழைப்பாணை விடுத்து எதிரிகளை தண்டிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

.